## த.வெ.க. அரசின் இரட்டை வேடம்! தீர்மானத்தினால் எந்தப் பயனும் இல்லை!

# ‘டெட்’ தேர்வு : கழக ஆட்சியிலேயே நடவடிக்கை எடுத்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்!

## பிரதமர் மோடிக்கு ஆசிரியர்கள் பாதுகாப்பு குறித்து கடிதம் எழுதினார்!

நாடு முழுவதும் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளிகளிலும், இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் நியமனங்கள் மேற்கொள்ள, கடந்த 2010ம் ஆண்டு ஆசிரியர் தகுதித் தேர்வு (டெட்) கட்டாயமாக்கப்பட்டது. தொடர்ந்து, தற்போது பணியிலிருக்கும் ஆசிரியர்களும், தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதுதொடர்பான சீராய்வு மனுவின் மீதான தீர்ப்பில், பணியில் உள்ள ஆசிரியர்கள், வரும் 2028ம் ஆண்டுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்பட்டது.

தமிழகத்தை பொறுத்தவரை, கடந்த 2010ம் ஆண்டிற்கு முன்பு பணி நியமனம் பெற்ற 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தற்போது அரசு பள்ளிகளில் பணி புரிந்து வருகின்றனர். இவர்களுக்காக ஆண்டுதோறும் சிறப்பு தகுதித்தேர்வு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து கடந்த மாதம் தகுதித்தேர்வு நடத்தப்பட்டது. இதனிடையே, தகுதித்தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண்ணை குறைப்பது தொடர்பாக, வழக்கு தொடரப்பட்டதால், முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் தமிழக சட்டமன்றத்தில் பேசிய அமைச்சர், ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து விலக்கு அளிப்பதற்கான தனி தீர்மானத்தை கொண்டு வந்தார். இதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனிடையே, தகுதித்தேர்வு விவகாரத்தில், த.வெ.க. அரசு இரட்டை நிலைப்பாடு எடுத்துள்ளதாக, ஆசிரியர்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

ஆனால் இப்பிரச்சினை குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுதே இது குறித்து பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12Aல் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, ஆசிரியர்களைப் பாதுகாப்பதுடன், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதி உள்ளார்.

அது வருமாறு :-

**நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஆசிரியர்களை, குறிப்பாக தமிழ்நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களை பாதிக்கும் அவசரமான மற்றும் முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆதரவைக் கோரி இன்று (25.11.2025) கடிதம் எழுதியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12Aல் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, ஆசிரியர்களைப் பாதுகாப்பதுடன், பதவி உயர்வுகளுக்கு தகுதி உடையவர்களாக இருப்பதையும், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்திட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

**முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் சிவில் மேல்முறையீடு எண் 1405/2025, 1385/2025 மற்றும் 1386/2025 மற்றும் பிற வழக்குகளில் 01.09.2025 அன்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சமீபத்திய தீர்ப்பில், ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெறாத பணியில் உள்ள அனைத்து ஆசிரியர்களும், அப்பணியில் தொடர இரண்டு ஆண்டுகளுக்குள் TET தகுதியைப் பெற வேண்டும் என்றும், மேலும், ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பணிக்காலம் உள்ள ஆசிரியர்கள் பணியைத் தொடர அனுமதிக்கப்பட்டாலும், TET தகுதி பெறாவிட்டால் பதவி உயர்வுக்குத் தகுதியற்றவர்களாக இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**தேசிய ஆசிரியர் கல்விக் குழுமமானது (National Council for Teacher Education NCTE), 238 2010க்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) போன்ற புதிய தகுதித் தேவைகளிலிருந்து ஆரம்பத்தில் விலக்கு அளித்திருந்தது என்றும் இருப்பினும், கல்வி உரிமைச் சட்டத்தில் (RTE) உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தற்போதைய இந்தத் தீர்ப்புரை, ஆசிரியர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட விலக்கினை மீறி, TET கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள அவர், இதன் விளைவாக, இந்த ஆசிரியர்கள் இப்போது இரண்டு ஆண்டுகளுக்குள் TET தேர்ச்சி பெற வேண்டும்; இல்லாவிடில், அவர்களின் வேலை பறிக்கப்படும் என்ற நிலை பெருத்த நிருவாக சிரமத்தையும், ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சிரமத்தையும் ஏற்படுத்தும் என்று வருத்தத்தோடு தெரிவித்துள்ளார்.**

**பணி நிபந்தனைகளில் இத்தகைய மாற்றம் மற்றும் நியமனத்திற்குப் பின் பதவி உயர்வுக்கான அவர்களின் நியாயமான எதிர்பார்ப்பில் இடையூறு என்பது, ஆசிரியர்களின் உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது என்றும், இது ஆசிரியர்களின் நியமனத்தின்போது, நடைமுறையில் இருந்த சட்டப்பூர்வ விதிகளின்கீழ் முழுமையாக தகுதி பெற்று, முறையாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பான்மையோரை நேரடியாக பாதிப்பதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.**

**அந்த வகையில் தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ நான்கு இலட்சம் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள் நியமனம் செய்யப்பட்ட நேரத்தில் அவர்கள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளையும் பூர்த்தி செய்தவர்கள் என்றும், சட்டப்படியான மற்றும் முறையான செயல்முறைகள் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்றும், அதோடு 2011ல் TET அறிமுகப்படுத்தப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே பணியில் சேர்ந்தவர்கள் அவர்கள் என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.**

**இந்த ஆசிரியர்களுக்கு TETஐ முந்தைய தேதியிட்டு அமல்படுத்துவது என்பது, அவர்கள் பணியில் தொடர்வதற்கும் மற்றும் பதவி உயர்வுகளுக்கான தகுதிக்கும் நீண்டகாலமாக நிலைநிறுத்தப்பட்ட பணி உரிமைகளில் குறிப்பிடத்தக்க இடையூறை உருவாக்குகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது மாநிலத்தில் நிர்வாகரீதியாக சாத்தியமற்ற ஒரு நிலையை உருவாக்குகிறது என்றும், பள்ளிக் கல்வி அமைப்பின் செயல்பாட்டைச் சீர்குலைக்கும் வகையில் கடுமையான அபாயத்தை ஏற்படுத்துகிறது என்றும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.**

**முந்தைய தேதியிட்டு இதனை அமல்படுத்துவது என்பது, பெரிய அளவிலான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது நாடு முழுவதும் கண்கூடாகத் தெரியும் என்றும் ஆட்சேர்ப்பு சுழற்சிகள், தகுதியான ஆசிரியர்கள் கிடைக்கும் தன்மை மற்றும் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் பணி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில், எந்த மாநிலத்திலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கை யிலான ஆசிரியர்களை மாற்றுவது சாத்தியமற்றது என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**மேலும், ஆசிரியர்கள் நியமனம் நியமனம் செய்யப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட தகுதியைக் காரணமாகக் கொண்டு மட்டும், நீண்ட காலமாக பணிபுரிந்து வரும் அனுபவம் பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்விற்கான வாய்ப்புகளை மறுப்பது என்பது, பெருத்த அளவிலான சிரமத்தையும், தேக்க நிலையையும் ஏற்படுத்துவதாக கவலையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், RTE சட்டத்தின் பிரிவு 23ல் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்புரைகள் காரணமாக, நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் இவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்றும், இந்தக் குறிப்புரையினால் ஏற்படும் பாதிப்பு என்பது, பிரிவுக் கூறு 21Aன்கீழ் அரசியலமைப்பு ரீதியான கல்வி உரிமைக்கும் நேரடி தாக்கங்களை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.**

**மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12A ஆகியவற்றில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஒன்றிய கல்வி அமைச்சகத்திற்கு அறிவுறுத்திடுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அப்போதுதான் 23.08.2010 அன்று பணியில் இருந்த ஆசிரியர்கள் பாதுகாக்கப்படுவதுடன், பதவி உயர்வுகளுக்கு தகுதி உடையவர்களாக இருப்பதையும், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்திட இயலும் என்று தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் கடந்த 2012ம் ஆண்டு முதல், ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. நீதிமன்ற உத்தரவின்படி, கடந்த 2010க்கு முன்பாக பணியில் சேர்ந்த அனைவரும், தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். சட்டமன்றத்தில் பேசிய அமைச்சர், தமிழக பள்ளிகளில் 23.08.2010க்கு முன்பாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, தகுதித் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

ஆனால், தமிழகத்தில் கடந்த 2011ம் ஆண்டு சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, தற்போது அரசுப் பள்ளிகளில் பணி புரிந்து வருகின்றனர். அமைச்சரின் அறிவிப்புப் படி பார்த்தால், இந்த 8 ஆயிரம் ஆசிரியர்கள் கட்டாயம் தேர்வு எழுதியாக வேண்டுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இதுகுறித்தும் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

## இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக சித்தரித்த விஜய் படங்கள்!

# விஜய்க்கு ஆறு அறிவு உள்ளதா? அன்று கேள்வி எழுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ.!

## மதுரை மத்திய தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ.-வின் பழைய வீடியோ வைரல்!

சென்னை, ஆக. 27 -

சட்டப்பேரவையில் இஸ்லாமியர்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்துள்ள மதுரை மத்திய தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. மதார் பதுருதீன், முன்னர், விஜய்க்கு ஆறு அறிவு இருந்தால் இஸ்லாமியர்களை தவறாக சித்தரிக்கும் படத்தில் நடித்திருப்பாரா என காட்டமாக பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சட்டப்பேரவையில் இஸ்லாமியர்கள் குறித்து அவதூறான கருத்துக்களை கூறி சர்ச்சையில் சிக்கிய மதார் பதுருதீனுக்கு, ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தக்க பதிலடி கொடுத்தனர்.

இஸ்லாமியர்களை தவறாக சித்தரித்த பீஸ்ட் படத்தில் நடித்ததற்காக விஜயை மதார் பதுருதீன் காட்டமாக விமர்சித்திருந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

விஜய்க்கு ஆறு அறிவு இருந்தால் இப்படிப்பட்ட படத்தில் நடித்திருப்பாரா என இதே எம்.எல்.ஏ. மதார் பதுருதீன் கடுமையாக விமர்சித்து இருக்கிறார்.

அதுமட்டுமா.... கற்பனை என்று சொல்லி விஜயின் தனிப்பட்ட வாழ்க்கையை தவறாக சித்தரித்து படம் எடுத்தால் அவர் ஒப்புக்கொள்வாரா என்றும் அந்த வீடியோவில் மதார் பதுருதீன் அறிவுபூர்வமாக கேள்வி எழுப்பி இருந்தார். விஜய் படத்தை தடை செய்ய வேண்டும் என்றும் அவர் கொந்தளித்துப் பேசி இருந்தார். த.வெ.க. எம்.எல்.ஏ. அன்று பேசிய வீடியோ, சமூக வலைதளங்களில் இன்று படுவேகமாக வைரலாகி வருகிறது.

### பல்டி அடித்திருக்கும் த.வெ.க. எம்.எல்.ஏ.!

அன்று அப்படி பேசிய அதே வாய்தான் இன்று விஜயை குளிர்ச்சிப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இப்படி பேசி இருக்கிறது. என்ன செய்வது? எல்லாம் எம்.எல்.ஏ. பதவி படுத்தும் பாடு என்று தலையில் அடித்துக் கொள்கிறார்கள் நெட்டிசன்கள்!

---

# 2013 வழக்கில் டி.எம்.செல்வகணபதி எம்.பி. உள்ளிட்டோர் விடுதலை!

## 13 ஆண்டுகளுக்குப் பிறகு சேலம் நீதிமன்றம் தீர்ப்பு!

சேலம், ஆக. 27 -

கடந்த 2013ஆம் ஆண்டு ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது நடைபெற்ற சம்பவம் தொடர்பாக, தி.மு.க. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். செல்வகணபதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில், அனைவரையும் விடுதலை செய்து சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்-1 உத்தரவிட்டுள்ளது.



ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது கத்திரிப்பட்டி பகுதியில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. நிர்வாகிகளுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அப்போது அங்கு சென்ற டி.எம். செல்வகணபதி, பிரச்சினையைத் தடுத்து நிறுத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அ.தி.மு.க. நிர்வாகிகளை காயப்படுத்தியும் கொடூர ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், டி.எம். செல்வகணபதி, முன்னாள் சேர்மன் விஜயகுமார், முன்னாள் தலைவர் கோபு (எ) தங்கதுரை, மோகன் கவுன்சிலர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் மீது சேலம் வீராணம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு கடந்த 13 ஆண்டுகளாக சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்-1ல் நடைபெற்று வந்த நிலையில், இறுதி விசாரணை நிறைவடைந்தது. குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்கை விசாரித்த நீதிமன்றம் டி.எம். செல்வகணபதி உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

இதன்மூலம், 2013ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கு 13 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்ற விசாரணையின் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.